சுருக்கம்

பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி – தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) – 117 தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – 01.01.2015 முதல் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (ப.க2(2)த் துறை

அரசாணை (2டி) எண்.12

நாள் : 02. 02 .2015
திருவள்ளுவராண்டு 2046
தை மாதம் 19 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.790, கணினி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை நாள் 06.11.1996
2. அரசாணை (1டி) எண்.145, பள்ளிக் கல்வித் துறை நாள் 10.05.2000
3. அரசாணை (1டி) எண்.118 பள்ளிக் கல்வித் துறை நாள் 12.05.2006
4. அரசாணை(நிலை)எண்.69,பள்ளிக் கல்வித் துறை நாள் 20.03.2007.
5. அரசாணை (1டி) எண்.66 பள்ளிக் கல்வி (விஇ) துறை நாள் 07.02.2011.
6. அரசாணை(1டி) எண்.136, பள்ளிக் கல்வி(விஇ) துறை, நாள்–20.04.2012.
7. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.095296/எல்3/2014, நாள்–18.12.2014.

************

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 117 தற்காலிக தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணிநிலையில் தோற்றுவிக்கப்பட்டு, 01.01.2006 முதல் ரூ.9300–34,800 + 4600 தர ஊதியம் என்ற ஊதியக்கட்டு அனுமதிக்கப்பட்டது. மேற்காணும் 117 தற்காலிக தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பணியிடங்களுக்கு பார்வை மூன்றில் காணும் அரசாணையில் 31.12.2006 முடியவும், பார்வை ஐந்தில் காணும் அரசாணையில் 01.01.2007 முதல் 31.12.2011 வரையிலும், பார்வை ஆறில் காணும் அரசாணையில் 01.01.2012 முதல் 31.12.2014 வரை தற்காலிக தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் தற்காலிக தொழிற்கல்வி ஆசிரியர்(கணினி அறிவியல்) பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் சூழ்நிலையில் பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.790, கணினி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை நாள் 06.11.1996–ன்படி தோற்றுவிக்கப்பட்ட 117 தொழிற்கல்வி ஆசிரியர்(கணினி அறிவியல்) தற்காலிக பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு 31.12.2014 உடன் முடிவடையும் நிலையில், இப்பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் 31.12.2015 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இப்பணியிடங்களுக்கான ஊதியம் மற்றும் இதரப் படிகளுக்கானச் செலவினம் கீழ்கண்ட தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும்.

<u>அரசுப் பள்ளிகள்</u>

2202 – பொதுக்கல்வி–02 இடைநிலைக் கல்வி–109 அரசு இடைநிலைப்பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது – AA. அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்–01 சம்பளங்கள் (த.தொ.கு.2202 02 109 AA 0108)

<u>மாநகராட்சி/நகராட்சி பள்ளிகள்</u>

2202 பொதுக்கல்வி –02 இடைநிலைக் கல்வி–109 அரசு இடைநிலைப்பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது – AB – நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை /மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் –01 சம்பளங்கள்(த.தொ.கு.2202 02 109 AB 0106)

<u>அரசு உதவி பெறும் பள்ளிகள்</u>

2202 பொதுக்கல்வி –02 இடைநிலைக் கல்வி –110– அரசுசாரா இடைநிலைப் பள்ளிகளுக்கு நிதி உதவி –I திட்டத்தில் சேராதது – AA- அரசு மானியம் பெறும் மேனிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிதியுதவி – 79 சம்பளமானியங்கள் –01 சம்பளங்கள் (த.தொ.கு.2202 02 110 AA 7911)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.73164/Edn-II/2014, நாள்– 28.01.2015ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.

<u>நகல்</u>

நிதிக் (கல்வி II)துறை, சென்னை–9.
அ.ந.மு. பிரிவு, சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

அரசு சார்புச் செயலாளர்.